
# 2023 – 2024





திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 29-வது பட்டமளிப்பு விழாவில் மாணவ, மாணவியருக்கு தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி பட்டம் வழங்கினார். (வலது) பட்டம் பெறுவதற்காக வந்திருந்த மாணவ, மாணவியரில் ஒரு பகுதியினர். படங்கள்: மு. லெட்சுமி அருண்

## சுந்தரனார் பல்கலைக்கழக 29-வது பட்டமளிப்பு விழா

# தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பட்டம் வழங்கினார்

● திருநெல்வேலி

திருநெல்வேலிமனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 29-வது பட்டமளிப்பு விழாவில். 1,053 மாணவ, மாணவியருக்கு தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி பட்டங்கள் வழங்கினார்.

பல்கலைக்கழகத்திலும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் செயல்படும் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளிலும் 2021-2022-ம் கல்வியாண்டில் மொத்தம் 43,861 பேர் பட்டங்களைப் பெற்றுள்ளனர். அவர்களில் முனைவர் பட்டம் பெற்ற 948 பேர், பதக்கங்கள் பெற்ற 105 பேர் என மொத்தம் 1,053 பேருக்கு மட்டும் ஆளுநர் நேரடியாக பட்டங்களை வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினம் வாவு வாஜிஹா பெண்கள் கலை அறிவியல் கல்லூரி இளங்கலை ஆங்கிலத்துறை மாணவி எம்.முகமது நூர் அஸ்மா என்பவர் அரபி, ஆங்கிலம் ஆகிய இரு பாடங்களில் முதலிடம் பெற்று 2 பதக்கங்களை பெற்றார். எஸ்.பாத்திமா சகாரா (திருச்செந்தூர் கோவிந்தம்மாள் ஆதித்தனார் கலை அறிவியல் கல்லூரி), எஸ். சித்ரா (தூத்துக்குடி ஏபிசி மகாலட்சுமி பெண்கள் கல்லூரி), எம். ஜோஸ் இம்மானுவேல் (நாசரேத் மர்காசிஸ் கல்லூரி), எம். ரஷீனா சப்ரியா (வாசுதேவநல்லூர் வியாசா கலை அறிவியல் பெண்கள் கல்லூரி), ஆர்.ரெஞ்சினி (சுந்தரனார் பல்கலைக்கழகம்), எம். பிரெஷ்மா (சுந்தரனார் பல்கலைக்கழகம்) ஆகியோர் தலா ஒரு பாடத்தில் பதக்கம் பெற்றனர்.

பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு தலைவர் பிபேக் டெப்ராய் பட்டமளிப்பு விழா உரையாற்றினார். பல்கலைக்கழக துணைவேந்தர் ந.சந்திரசேகர் வரவேற்றார். மாநில உயர்கல்வித்துறை முதன்மை செயலர் ஏ.கார்த்திக், பல்கலைக்கழக பதிவாளர் ஜே.சாக்ரடீஸ், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் அண்ணாத்துரை, எம்எல்ஏக்கள் நயினார் நாகேந்திரன், மனோஜ் பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விழாவில் துணைவேந்தர் ந. சந்திரசேகர் பேசியதாவது: மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின்கீழ் தற்போது 101 கல்லூரிகள் செயல்படுகின்றன. இவற்றில் 5 கல்லூரிகள் நூறாண்டுக்கும் மேல் பழமையானவை. 10 கல்லூரிகள் தன்னாட்சி அந்தஸ்தை பெற்றுள்ளன. 38,445 மாணவர்கள், 72,254 மாணவிகள் கல்வி பயில்கின்றனர்.

சமீபத்தில் இந்திய அளவில் பல்கலைக்கழகங்களின் தரவரிசை பட்டியல் வெளியானது. அதில் 83-வது இடத்தை சுந்தரனார் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் தற்போது 55 பாடத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பல்கலைக் கழகத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டம் ராஜாக்கமங்கலத்தில் செயல்படும் கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தில் ரூ.600 கோடியில் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தப்படவுள்ளது.

மத்திய தொல்லியல் துறையுடன் இணைந்து தொல்லியல்துறை முதுகலை பாடப்பிரிவை தொடங்கியுள்ளோம். இதற்கான பாடத்திட்டத்தை தொல்லியல் துறை நிபுணர்கள் உருவாக்கி வருகிறார்கள்.

பல்கலைக்கழகத்தில் ரூ.29.70 கோடி மதிப்பிலான 93 ஆராய்ச்சி திட்டங்களுக்கு ஒப்புதல் கேட்டு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. தொலைநிலை கல்வி திட்டத்தில் 18 கலை மற்றும் அறிவியல் பாடத்திட்டங்களுக்கு புதிதாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை ஐஐடியுடன் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்மூலம் கல்வி, வேலைவாய்ப்புக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன என்று தெரிவித்தார்.

### ‘புதிய இந்தியாவை கட்டமைக்க வேண்டும்’

பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு தலைவர் பிபேக் டெப்ராய் பேசியதாவது: 1885–ம் ஆண்டில் சுந்தரம்பிள்ளையின் காலகட்டத்தில் பாரதத்தின் வரலாறு வித்தியாசமாக இருந்தது. அதிலிருந்து 100 ஆண்டுகளுக்கு பின் 1955–ம் ஆண்டுகளில் இந்தியாவின் வரலாறு வேறுவிதமாக இருந்தது. ஒவ்வொரு காலகட்டத்திலும் மக்களின் விருப்பங்கள் வேறுவிதமாக இருக்கின்றன. 1883–ம் ஆண்டில் கல்கத்தா பல்கலைக்கழகம் பரந்து விரிந்து காணப்பட்டது.

ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்ட ஆசிய பகுதிகளிலேயே முதல்முதலாக பட்டம் பெற்ற பெண்மணி காதம்பரி கங்குலி இப்பல்கலைக்கழக மாணவியாவார். மேற்கத்திய நாடுகளில் பல்வேறு தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் உருவாகும் முன்னரே, பாரதத்தில் நாளந்தா, தட்சசீலம் உள்ளிட்ட 8 பல்கலைக்கழகங்கள் இருந்துள்ளன. அவற்றில் பட்டமளிப்பு விழாக்களும் நடத்தப்பட்டுள்ளன.

இந்தியர் என்பதில் எப்போதும் பெருமை கொள்ள வேண்டும். இந்தியாவின் எதிர்காலம் பிரகாசமாக உள்ளது. இளைய தலைமுறையினரான நீங்கள் 2047–ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளம்பொருந்திய வல்லரசு நாடாக உருவாக்க முன்வர வேண்டும். அடுத்த தலைமுறையினருக்கு வளமான பாரதத்தை நாம் அளிக்க வேண்டும். இதன்மூலம் நமது முன்னோர்கள் கண்ட கனவுகள் நனவாகும்.

கன்னியாகுமரி என்றவுடன் விவேகானந்தர் நினைவுக்கு வருவார். அவர் ஆங்கிலத்தில் ஆற்றிய உரை பிரசித்தி பெற்றது. ஆனால் அவர் வங்காளத்தில் நவீன இந்தியா குறித்து பல்வேறு விஷயங்களை எழுதியிருக்கிறார். அவற்றை மாணவர்கள் படிக்க வேண்டும். புதிய இந்தியாவை நீங்கள் கட்டமைக்க வேண்டும் . இவ்வாறு அவர் பேசினார்.